[7th November 1966

அத்தகைய குற்றங்களை, அதாவது லைசென்ஸ் எடுக்காத குற்றங்களுக்கு அவற்றை ஆங்காங்கு வழங்குவதற்கு அதிகாரிகள் இல்லை என்பது கூட காரணமாக இருக்கலாம். இதை எல்லாம் பரிசிலனை செய்து அதற்குத் தனியாக விவரங்கள் காட்ட இனி மேலாவது ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : பரிசீலனை செய்துதான் சொல்ல வேண்டும்.

திரு. கே. டி. கோசல்ராம் : மதுவிலக்கு விதிகளில் மது கஷாயம் விற்கலாம் என்று சட்டம் அனுமதிக்கிறது. அதை வாங்கி குடித்துவிட்டு வந்தவுடன் அதில் ஆல்கஹால் இருக்கிறது என்று ப்ராசிக்யூட் செய்ய அதிகாரம் இருக்கிறது. ஆகவே, இத்தகைய அனுமதி இருப்பதால் மது கஷாயத்தை விற்பது தவறு என்று அரசாங்கம் விதிகளில் என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்து அப்படி விற்கலாம் என்றிருப்பதை ரத்து செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே அதுபற்றி பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம். அதையும் கட்டுப்படுத்தவேண்டும், தடுக்க வேண்டும் அப்படித் தடுத்தால் மேற்கொண்டு திட்டத்தை நல்ல முறையில் நடத்தமுடியும் என்று மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்

திரு. கே. டி. கோசல்ராம் : நிர்வாக உத்தரவு மூலம் மது கஷாயம் விற்கலாம் என்று போட்டிருக்கிறது. அந்த நிர்வாக உத்தரவை கான்சல் செய்துவிட்டால் அதைத் தடுக்கலாம் என்பது தெரியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : போட்ட உத்தரவை ரத்து செய்து விட்டால் தடுக்கலாம். இருந்தாலும், சில வைத்தியத்தின் காரணமாக ஏற்கனவே அப்படி செய்திருக்கிறார்கள். அதையும் நிறுத்த பரிசீலனை செய்கிறோம். இனிதான் முடிவிற்கு வரவேண்டும்.

Retrenchment of village officials

* 480 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) whether there is any proposal to have a retrenchment of the services of a number of village officials and staff in Tiruchirappalli district; and

(*b*) if so, the details thereof and the reasons therefor?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The Government have ordered the retrenchment of certain last grade village officers in the district.

(*b*) A total of 94 talayaris and 109 vettis have been ordered to be retrenched. This retrenchment has been ordered with a view to effect economy in expenditure on administration. The orders have been implemented with effect from **1st July 1966**.

7th November 1966]

திரு. து. ப. அழகமுத்து : பொருளாதார சிக்கனத்திற்காக தலையாரிகள், வெட்டியான்கள் இவர்களை ஆள்குறைப்பு மூலம் நீக்கியிருப்பதாக கூறியிருக்கிறார்கள். அவர்கள் நீண்ட நாட்களாக பணியாற்றி வந்தவர்களா ? அல்லது தாற்காலிகமாக பணியாற்றி வந்தவர்களா ? நீண்ட நாட்களாக பணியாற்றி வந்தவர்கள் என்றால் அவர்கள் வேலை இழந்து கஷ்டப்படும் நெருக்கடி நிலை வருகிறது. அதற்கு என்ன பரிகாரம் தேட அரசாங்கம் உத்தேசிக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த உத்தரவு போட்டதற்குப் பிறகு அதை மீண்டும் பரிசிலனை செய்தபோது இவர்கள் எல்லாம் வீட்டுக்கு அனுப்பப்பட மாட்டார்கள், புது இடங்களில் இவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பது அரசாங்கம் தகவல் சேகரித்து தெரிந்து கொண்டிருக்கிறது. இதனால் யாருக்கும் பாதகம் வராத முறையில் இந்தத் திட்டம் நடைமுறையில் வரும்.

திரு. செ. மாதவன் : நில வரி குறைப்பு காரணமாக கிராம அதிகாரிகளை நீக்கக்கூடிய ப்ரபோசல் இருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதையெல்லாம் பரிசிலனை செய்வதற்குத்தான் கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஸ்பெஷல் ஆபீசர் போட்டிருப்பதைக் குறிப்பிட்டார்கள்.

Thuvargram

*481 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state :

(a) the quantity of Thuvargram and Thuvargram dhall purchased by the Government from other States in 1965;

(b) their respective purchase prices;

(c) the respective rates at which they are sold; and

(d) the stock remaining on hand now?

THE HON. SRI V. RAMAIAH—

(a) A quantity of 3,699 tonnes of Toor and 7,926 tonnes of Toor dhall were purchased from other States during 1965.

	Toor. (1) RS.	Toor Dhall. (2) RS.
(b)—		
Madhya Pradesh (per tonne).	1,000	..
Uttar Pradesh (per tonne).	700 to 850	900 to 1,050 for special variety 900 to 1,100 for pool variety.
Andhra Pradesh (per tonne)	900	1,230.